# உடலுளத் தாக்கத்தில் செல்வாக்குச் செலுத்தும் தொலைக்காட்சித் தொடர் நாடகங்கள் குறித்த சமகாலப் போக்கு

**கேசவன் பிரேமகலா**
*இந்துநாகரிகத்துறை, இந்துக் கற்கைகள் பீடம். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*

**ஆய்வுச்சுருக்கம்**

மனித வாழ்க்கையானது சலிப்படையாமல் நகர்ந்து செல்வதற்கு பொழுதுபோக்கு மிகவும் இன்றியமையாததாகும். அதனடிப்படையில் எத்தனை பொழுதுபோக்கு விடயங்கள் இருந்தாலும் இன்றைய நவீன தொழிநுட்ப வளர்ச்சியின் காரணமாக மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுக்கொண்ட ஓர் சாதனமாகத் தன்னைப் பரிணமித்துக் கொண்ட பெருமைக்குரியது தொலைக்காட்சி எனலாம். இயந்திரமாக ஓடிக்கொண்டிருக்கின்ற மக்கள் வாழ்வில் ஒரு சிறு ஓய்வைத் தரும் விடயங்களில் ஒன்றாக அன்று தொடக்கம் இன்றுவரையும் சின்னத்திரை ஒன்றித்துள்ளது என்பதனை எம்மால் மறுக்க முடியாது. அதிலும் தொலைக்காட்சித் தொடர் நாடகங்களானவை கற்பனை என்ற நிலையையும் தாண்டி ஒவ்வொரு வீட்டினதும் முக்கிய அம்சங்களில் ஒன்றாக மாறிக்கொண்டிருப்பது அவதானிக்கத்தக்கதே. இத்தகைய மாற்றமானது சமூகத்தில் ஒவ்வொரு மனிதனதும் உடலுளப் பாங்கில் செல்வாக்குச் செலுத்துவதனைக் காணலாம். தொடர் நாடகங்களில் நடிக்கும் கதாபாத்திரமாகவே தன்னை நினைத்து நிஜ வாழ்விலும் அப்பாத்திரத்தின் குணநலன்களை, நடை உடைகளை உள்ளீர்த்தல் என்பதில் சாதகபாதகம் இரண்டுமே தங்கியுள்ளது. இவ்வாய்வானது தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும் இந்தியத் தமிழ் தொலைக்காட்சித் தொடர் நாடகங்களினால் மனித வாழ்வில் ஏற்பட்டுள்ள உடலுளத் தாக்கத்தை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்தவகையில் தொடர் நாடகங்களின் இயல்பு, அது எவ்வாறு உடலுள ரீதியான சாதக பாதக விளைவுகளை ஏற்படுத்துகின்றது, இதனை பயன்பாட்டுக்குரியதாக்கும் வழிமுறைகள் என்பவற்றை நோக்காகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் இவ்வாய்வானது இரத்தினபுரி மாவட்டத்தின் நிவித்திகலை பிரதேசத்தில் எழுமாற்றாக தெரிவுசெய்த சில கிராமங்களை அடிப்படையாகக் கொண்டு அமையப்பெற்றுள்ளதுடன் ஒரு சமூகச் சூழல்சார் ஆய்வாக அமையப்பெறுவதனால் இங்கு பண்புசார் ஆய்வு முறையியல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ் ஆய்விற்கான தரவுகள் கள ஆய்வு மூலம் வெளிக்கொணரப்பட்டுள்ளதுடன், அவதானித்தல் முறை, நேர்க்காணல், கலந்துரையாடல் போன்றவற்றை கருவிகளாகக் கொண்டும் ஆய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் இவ் ஆய்வானது துறை ரீதியான மேலதிக ஆய்வு செய்வோருக்கும், பாடசாலை மாணவர்கள், தொலைக்காட்சி சமூகம் போன்ற இன்னும் பலருக்கும் பயன்படுவதோடு, சமூகத்தில் மக்களிடையே ஒரு மாற்றத்தைக் கொண்டுவரவும் பாதகத்தைத் தவிர்த்து சாதகத்தை உள்ளீர்த்து முன்னேறிச் செல்லவும் வழிவகுக்கும் என்பது திண்ணம்.

**திறவுச் சொற்கள்** - தொலைக்காட்சி, சின்னத்திரை, தொடர் நாடகங்கள், உடலுள ரீதியான மாற்றம்